In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No. 49/2021 | Prosecution witness P.W.13 |
| Name: Dr. Mohamed Nazim | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 01-04-2025.

**(Accused absent, petition u/s 355 BNSS. filed and allowed,)**

முதல் விசாரணை :-

நான் தற்போது புதுக்கோட்டை மருத்துவக்கல்லூரியில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் இணை பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 5.6.2020ம் தேதியன்று மதுரை மருத்துவக்கல்லூரியில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் இணை பேராசிரியராக இருந்தபோது அன்றைய தேதியன்று பிற்பகல் 3 மணியளவில் அம்மயநாயக்கனூர் காவல்நிலைய கு.எண்.319/2020. u/s 294(b), 324, 307, 302 IPC வழக்கில் இறந்துபோன செண்பகராஜன் என்ற வயது 31 உடைய ஆண் பிரேதத்தினை பரிசோதனை மேற்கொள்ள அம்மயநாயக்கனூர் காவல் ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை முநிகா.1941 கீரன் என்பவர் மூலமாக பெறப்பட்டு பிரேத பரிசோதனை செய்ய அங்க மச்ச அடையாளம் காண்பிக்கப்பட்டு பிற்பகல் 3.15 மணியளவில் பிரேத பரிசோதனை செய்ய ஆரம்பித்தேன். பிரேதமானது பிணவிறைப்புத்தன்மை உடல் முழுவதும் பரவி காணப்பட்டது. மிதமான போஷாக்கான 31 வயதுடைய ஆண் பிரேதம் கை கால் நகங்கள் நீல நிறத்தில் காணப்பட்டது. மேலும் இடதுபக்க மார்புக்கூட்டில் சிகிச்சைக்கான காயம் 2x1 c.m. நீள அகலத்துடன் மார்பு வரை ஆழத்தில் காணப்பட்டது. சிகிச்சைக்காக குழாய் பகுதி இடது பக்க வயிற்றுப்பகுதியில் காணப்பட்டது.

இறப்புக்கு முன் ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு.

1. தையலிடப்பட்டு பிரிக்கப்பட்ட காய்ந்த காயம் 7 x 1 c.m. அளவில் இடது பக்க பின்னந்தலை மற்றும் பக்கவாட்டில் காணப்பட்டது.

2. தையலிடப்பட்டு பிரிக்கப்பட்ட காய்ந்த காயம் 2 x 1 c.m. அளவில் இடது பக்க தலை பக்கவாட்டில் காணப்பட்டது.

3. தையலிடப்பட்டு பிரிக்கப்பட்ட காய்ந்த காயம் 1 x 1 c.m. அளவில் இடது பக்க பக்கவாட்டு தலையில் காதுக்கு பக்கத்தில் காணப்பட்டது.

4. தையலிடப்பட்டு பிரிக்கப்பட்ட வயிற்றின் முன்புறத்தில் சிகிச்சைக்கான காயம் 24 x 1 c.m. மற்றும் வயிற்று ஆழம்வரை காணப்பட்டது. காயமானது நெஞ்செலும்பின் அடிப்புறத்தில் இருந்து தொப்புளுக்கு கீழ் 4 செ.மீ. கீழ்புறமாக காணப்பட்டது.

5. குறுக்கு சாயலான தையலிப்பட்ட காய்ந்த காயமானது 3x1 c.m. நீள, அகல அளவுகளுடன் இடதுபக்க மார்பு அறையில் காணப்பட்டது. காயமானது 10 செ.,மீ. அளவு இடதுபக்க மார்பு காம்பிலிருந்து கீழாகவும், மற்றும் அடிப்புற நெஞ்செலும்பிலிருந்து 4 செ.மீ. வெளிப்புறமாக காணப்பட்டது.

6. காய்ந்த சிராய்ப்புக் காயம் 3x1 c.m. அளவில் இடது பக்க முதுகுப்புறத்தில் காணப்பட்டது.

7. காய்ந்த சிராய்ப்புக்காயம் 3x2 c.m. அளவில் இடது பக்க கை முட்டி எலும்பில் காணப்பட்டது.

8. காய்ந்த கோடிடப்பட்ட சிராய்ப்புக்காயமானது 7x1 c.m அளவில் வலது காலில் 1/3 கீழ்பகுதியில் காணப்பட்டது.

தலைப்பகுதியை கூராய்வு செய்ததில் தலைத்தோலின் அடிப்புறத்தில் 8 x 6 c.m. அளவுகளுடன் இடது பக்க பக்கவாட்டு மற்றும் பின்புறத்தலையில் காணப்பட்டது. விரிசலடைந்த கபால எலும்பு பகுதியானது 4x .25 c.m. நீளத்துடன் இடதுபக்க பக்கவாட்டு கபால எலும்பில் காணப்பட்டது.

நெஞ்சுப்பகுதி மற்றும் வயிற்றுப்பகுதியை கூராய்வு செய்ததில் நெஞ்சுப்பகுதியில் இடதுபக்க நுரையீரலை சுற்றி சுமார் 100 மில்லி திரவமானது இரத்தக்கட்டுடனும் மற்றும் சீல் பிடித்தும் காணப்பட்டது. வலது பக்க மார்புக்கூட்டில் 15 மில்லி அளவிலான திரவமானது இரத்தக்கட்டுடனும் மற்றும் சீல் பிடித்தும் காணப்பட்டது. இடது பக்க உதரவிதானமானது நூலினால் தையலிடப்பட்டு காணப்பட்டது. மேலும் மண்ணீரல் பெரிதாகவும், 13x8x6 c.m. அளவுகளுடன் காணப்பட்டது. அதை கூராய்வு செய்து பார்த்தபோது கன்றியிருந்தது, இரத்தம் செறிந்த நிலையில் காணப்பட்டது. வயிற்று அறையில் 100 மில்லி திரவம் இரத்தக்கட்டுடனும் மற்றும் சீல் பிடித்தும் காணப்பட்டது.

இதர பகுதியில் கீழ்க்கண்டவை கண்டறியப்பட்டது.

வயிற்று அறை மற்றும் மார்பு அறை மேலேசொன்னவாறு காணப்பட்டது. இதயத்தை சுற்றியுள்ள அறை 15 மில்லி வைக்கோல் நிறத்திலான திரவம் இரத்தக்கட்டிகளுடன் காணப்பட்டது. இதயத்தின் வலதுபுற அறையில் நீர்த்த நிலை இரத்தமும், இடதுபக்கம் காலியாகவும் காணப்பட்டது. இதயத்துடிப்புக்கான இரத்தநாளம் சாதாரண நிலையில் இருந்தது. நுரையீரல் பகுதி சலிக்கோழையுடன் இரண்டுபக்கமும் பரவி காணப்பட்டது. மூச்சுக்குழாய் சாதாரண நிலையில் இருந்தது. நாவடி எலும்பு சாதாரணமாக இருந்தநிலையில் காணப்பட்டது. இரைப்பையில் 100 மில்லி அளவில் சிவப்பு கலந்த ப்ரவுன் நெடியுடன் கூடிய திரவம் காணப்பட்டது. உட்புற சவ்வானது இரத்தம் செறிந்த நிலையில் காணப்பட்டது. கல்லீரல் மற்றும் சிறுநீரகங்களை கூராய்வு செய்ததில் இரத்தம் செறிந்த நிலையில் காணப்பட்டது. மண்ணீரல் மேலே குறிப்பிட்டவாறு காணப்பட்டது. சிறுகுடலில் 20 மில்லி பழுப்பு நிறத்தினான திரவம் நெடியுடனும், உட்புற சவ்வானது இரத்தம் செறிந்த நிலையில் காணப்பட்டது. சிறுநீரகப்பை காலியாக இருந்தது. மூளையை கூராய்வு செய்ததில் அது இரத்தம் செறிந்த நிலையில் காணப்பட்டது. அன்றைய தினம் ரசாயன பகுப்பாய்வுக்காக உடல்

உள்ளுறுப்புக்கள் சேகரிப்பட்டும், கல்லீரல் பகுதியும் சேகரிக்கப்பட்டும் திசு பகுப்பாய்வுக்காக அனுப்பிவைக்கப்பட்டது. விசரா அறிக்கை பெறப்பட்டு இறுதி கருத்துரை 9.7.2020 ம் தேதியன்று வழங்கப்பட்டது.

இறுதிக்கருத்து

மேற்கூறப்பட்ட இறந்த நபரானவர் அவருக்கு நெஞ்சு மற்றும் வயிற்றுப் பகுதியில் ஏற்பட்ட காயத்தினாலும், அதன் பக்க விளைவுகளாலும் இறந்திருக்கலாம் என்று கருத்து கூறி அறிக்கை வழங்கினேன். ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதம் அதசாஆ.12. நான் வழங்கிய பிரேத பரிசோதனை அதசாஆ.13, இறுதி கருத்து அதசாஆ.14. ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

1 முதல் 3 வரையிலான காயங்கள் இரும்பு மற்றும் கம்பி போன்ற ஆயுதங்களினால் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். மேலும் கனத்த பொருட்களால் அடித்தாலும் ஏற்பட வாய்ப்புண்டு. மேலும் அக்காயங்கள் தையலிடப்பட்டு, காய்ந்த நிலையில் காணப்பட்டதால் அறுதியிட்டு சொல்ல இயலாது. நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் பிரேத பரிசோதனை செய்யவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இறந்த நபரை நான் 15 நாட்கள் கழித்துதான் பிரேத பரிசோதனை செய்தேன் என்றால் சரிதான்.

மறு விசாரணை–இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.04.01 15:00:29 +0530

Principal District Judge,
Dindigul.